அரசாங்கத்தின் கல்விச் செயலாளர் அவர்கள் அங்குள்ள தொடக்கப் பள்ளிகளுக்கும், செகண்டரி பள்ளிகளுக்கும் மற்றும் கல்லூரிகளுக்கும் சேர்த்து ஒரு அவசரச் சட்டம் கொண்டுவந்திருக்கின்றார்கள். நம்முடைய மாநிலம் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்குப் பிறகு முயற்சி எடுத்தவர்கள் கல்லூரிகளுக்கும் சேர்த்துக் கொண்டு வந்துவிட்டார்கள். ஆதலால் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்—இப்போது கல்லூரி ஆசிரியர்களுடைய வேண்டுகோளுக்கு இணங்க ஒரு அவசரச் சட்டம் ஆந்திரா அரசாங்கம் போட்டிருப்பது போல—இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட முறையில் இந்த ஜூன் மாதத்திற்குள் அந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஏதாவது ஆலோசனை வைத்திருக்கிறார்களா? இல்லையேல் இதுபற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கின்றது.

Playgrounds for Hockey Game.

*262 Q.—THIRU D. V. D' MONTE : Will the Hon. the Minister for Education be pleased to state :—

(*a*) whether the Government have any proposals to provide playgrounds to improve the standard of Hockey in the City and Districts ;

(*b*) if so, the steps taken thereon ;

(*c*) whether, with a view to improving the standard of Hockey, the Government have any proposals to make Hockey a compulsory game for boys in schools ; and

(*d*) if not, the steps proposed to be taken to achieve this?

ஹாக்கி விளையாட்டிற்கு விளையாட்டுத் திடல் வசதிகள்.

திரு. டி. வி. டிமாண்டி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) மாநகரிலும் மாவட்டங்களிலும் ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்துவதற்காக விளையாட்டுத் திடல் வசதிகள் செய்து கொடுக்கும் செயற்குறிப்புகள் எவையேனும் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

 [திரு. டி. வி. டிமாண்டி]

(உ) ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்தும்பொருட்டு பள்ளி மாணவர்களுக்கு ஹாக்கி விளையாட்டைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்புகள் எவையேனும் அரசிடம் உள்ளனவா?

(எ) இல்லையெனில், ஹாக்கி விளையாட்டின் தரத்தை உயர்த்த மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை,

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்போது நம் மாநிலத்தில் எல்லாப் பள்ளிகளிலும் கட்டாய விளையாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள விளையாட்டுகளுள் ஒன்றுன ஹாக்கியும் வசதியுள்ள பள்ளிகளில் எல்லாம் விளையாடப்படுகிறது.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru D. V. D'Monte : Sir, although India holds the fourth place in world standards in women's hockey, the standard as far as Tamil Nadu is concerned has fallen very much in recent years mainly because of lack ofplaying-fields for exclusive use of women's and girls' teams. May I know whether there is any proposal before the Government of Tamil Nadu to provide an exclusive playing-field for promotion of women's hockey in our State?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருக்கின்ற பல்வேறு பள்ளிக்கூடங்களிலே, சில பள்ளிகளில்தான் நல்ல முறையில் விளையாட்டுத் திடல் அமைந்திருக்கின்றது. பல பள்ளிகளில் இடவசதி இல்லாததன் காரணமாக அடிப்படை விளையாட்டுகளுக்குக் கூட இடமில்லாமல், வசதி யில்லாமல் இருக்கின்றது. ஆகவேதான் இப்போது புதிய பள்ளிகள் எங்கே துவங்கினுலும், ஒரு ஐந்து ஏக்கருக்குக் குறையாமல் இடவசதி இருக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறேம். கட்டடங்களுக்கு என்று ½ ஏக்கர் போனுலும்கூட, ஒரு மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர் விளையாட்டுத் திடல்களுக்கென்று அமையவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படை யாக வைத்துத்தான் நாங்கள் வற்புறுத்தி வருகிறேம். எங்கெங்கு இடவசதிகள் இருக்கின்றனவோ, அங்கேயெல்லாம் கால் பந்து விளை யாட்டு, கைப் பந்து விளையாட்டு, ஹாக்கி விளையாட்டு, கிரிக்கெட் விளையாட்டு ஆகிய இவற்றுக்கெல்லாம் இடம் ஒதுக்கியிருக்கின்றுர்கள். அது தவிர மாவட்ட விளையாட்டுக் குழுவினர் சார்பாகவும், எந்தெந்தப் பள்ளிகளில் இதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லையோ, அந்தந்தப் பள்ளிகள் எல்லாம் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு மாவட்ட விளை யாட்டுக் குழுக்கள் சார்பாக விளையாட்டுக் கூடங்களை அமைக்கின்ற அளவுக்கு நாம் முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றேம். அந்த அளவிலே, திருச்சி, வேலூர், நீலகிரி, ஊட்டி, மதுரை, நாகர்கோவில், காஞ்சிபுரம், கடலூர்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 ஏப்ரல் 21

சேலம், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் ஹாக்கி விளையாடுவதற்கென்று அங்குள்ள மாவட்ட விளையாட்டுக் குழுக்களின் சார்பில் தனியாக இடங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எந்தெந்தப்பள்ளிகள் விரும்புகின்றனவோ அவை அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் சொல்லியிருக்கின்றோம். இப்படி பொதுவான இடங்களை உருவாக்கி ஒரு நான்கு, ஐந்து பள்ளிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற அளவுக்கு செய்ய முடியும் என்று சொன்னால், இவ்வாறு பெரிய நகரங்களில் எல்லாம செய்யலாம் என்ற கருத்தையும் நாங்கள் வெளியிட்டிருக்கின்றோம்.

Free Eye Camp.

*263 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Health be pleased to state the number of persons benefited by the 'Free Eye Camp' in Tamil Nadu till 31—1—1975, District-wise?

இலவசக் கண் சிகிச்சை முகாம்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

தமிழ்நாட்டில் 31—1—1975-ஆம் நாள் வரை, இலவசக் கண் சிகிச்சை மூலம் உதவி பெற்றவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தமிழ்நாட்டில் 31—1—1975 ஆம் நாள் வரை மொத்தம் 8,05,959 பேர்கள் இலவசக் கண் சிகிச்சை மூலம் பல்வேறு வகையான உதவியைப் பெற்றுள்ளார்கள். அதன் விவரம் :—

சென்னை	11,422
செங்கற்பட்டு	41,610
வடஆற்காடு	52,792
தென்னாற்காடு	51,374
தர்மபுரி	23,851
தஞ்சாவூர்	1,01,356
திருச்சிராப்பள்ளி	92,701
சேலம்	63,185
கோயம்புத்தூர்	91,773
நீலகிரி	25,109
மதுரை	1,06,090
ராமநாதபுரம்	78,102
திருநெல்வேலி	49,876
கன்னியாகுமரி	12,403
புதுக்கோட்டை	4,323

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS